P.R.NO.551 **DT 03.11.2026**

நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர்

திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப., அவர்களின் செய்திக்குறிப்பு

வேளாண் உழவர் நலத்துறையின் வேளாண் நிதிநிலை அறிக்கை 2026-2027 – நாட்டின மாடுகளை வளர்க்கும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை ஊக்குவிக்கும் திட்டம் செயல்படுத்துதல்.

வேளாண்மை உழவர் நலத்துறையின் வேளாண் நிதிநிலை அறிக்கை 2026-27-06.08.2026 அன்று மாண்புமிகு அமைச்சர் (வேளாண்மை, உழவர் நலத்துறை) அவர்கள் கால்நடை பராமரிப்புத்துறை சார்ந்த கால்நடைகளின் இனப்பெருக்கத்திறனை மேம்படுத்தும் வகையில் நாட்டின மாடுகளை வளர்க்கும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை ஊக்குவிக்கும் திட்டத்தை அறிவித்தார்..

நாட்டின மாடுகளின் பராமரிப்பு மற்றும் தொடர்ச்சியான வளர்ப்பிற்கான அதிகரித்த ஆதரவு வழங்குதல் மற்றும் நாட்டின மாடுகள் வளர்க்கும் சுயஉதவிக்குழு பெண்களுக்கு நிதி உதவி வழங்குதல் போன்றவற்றை நோக்கமாக கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டின் நாட்டின மாட்டினங்களான காங்கேயம், புலிக்குளம், உம்பளாச்சேரி, பர்கூர், ஆலம்பாடி மற்றும் தோடா எருமை போன்ற நாட்டினங்களை வளர்க்கும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களில் தகுதியுள்ள பெண் பயனாளிகளுக்கு ஒருமுறை ஊக்கத்தொகையாக ரூ.5000 /- வழங்கப்படுகிறது.

நீலகிரி மாவட்டதில் உள்ள நாட்டின மாடுகளை வளர்க்கும் சுய உதவிக்குழு பெண்கள் இத்திட்டத்தில் பயன்பெற, அருகாமையில் உள்ள கால்நடை நிலையங்களை அணுகி இத்திட்டத்திற்காக விண்ணப்பிக்க தகுதியினை அறிந்து **15.11.2026**- க்குள் விண்ணப்பம் அளித்து பயன்பெறுமாறு நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்